OS 88/2022
வா.சா.1 சங்கர் த/பெ மணி
நாள் 10.02.2026

**குறுக்கு விசாரணை**

1. வாதியும் பிரதிவாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள், பங்காளிகள் என்றால் சரிதான். வழக்குரையில் 3வது பத்தியில் 2294/2018 என்று கிரையப்பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த விவரம் யார் சொல்லி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அப்பா சொல்லி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் எழுதப்பட்ட முத்திரைத்தாள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் 25.03.2019ல் என் பெயரில் வாங்கப்பட்டது ஆகும். என் பெயர் எழுதுவதற்கு முன்பு முத்திரைத்தாளில் வேறு பெயர் இருந்தது அடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அடித்து தான் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஒரே நாளில் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். யார் ஆவணத்தை தட்டச்சு செய்தது என்றால் முருகன் என்பவர் தட்டச்சு செய்தார். வா.சா.ஆ.1 எங்கு ஏற்பட்டது என்றால் ஆரணி சார் பதிவாளர் அலுவலத்தில் ஏற்பட்டது. ஆவணம் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் இருவர் நானும் பிரதிவாதியும் இருந்தோம் ஆவண எழுத்தரும் இருந்தார். சாட்சிகள் என்பவர் யார் என்றால் மேட்டுக்குடிசை கணபதி, தேவிகாபுரம் கண்ணதாசன் ஆகியோர் ஆவர்.

2. சாட்சிகளை யார் அழைத்து வந்தது என்றால் நான் தான் அழைத்து வந்தேன். வா.சா.ஆ.1ல் முதல் தாளில் உள்ள எழுத்துகளுக்கும் 2ம் தாளில் உள்ள எழுத்துகளுக்கும் அளவு வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை ஒரே மாதிரி தான் உள்ளது. இரண்டு தாள்களில் வேறு வேறு மாதிரி அளவில் எழுத்துகள் வேறுபாடு உள்ளது என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்திரைத்தாள் யாரிடம் வாங்கப்பட்டது என்றால் ஆரணியில் உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் அருணாச்சலம் என்பவரிடம் வாங்கப்பட்டது. 20 ரூபாய் முத்திரைத்தாளில் உள்ள எண். 92AB860014 ஆகும். 25.03.2019ல் முத்திரைத்தாள் வாங்கினேன். வா.சா.ஆ.1ஐ அதில் உள்ள வாசகங்களை தட்டச்சு செய்தவர் என்று விவரம் மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எண். 92AB860014 என்ற முத்திரைத்தாள் நான் சொன்ன தேதியில் ஆரணி சார் கருவூலத்தில் இருந்து வெளியிடப்படவில்லை என்றால் இல்லை வந்து இருந்தது. எண். 92AB860014 முத்திரைத்தாள் 02.03.2021ல் தான் முத்திரைத்தாள் விற்பனையாளர் அருணாச்சலம் என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை.

3. எண். 92AB860014 என்ற முத்திரைத்தாளை முத்திரைத்தாள் விற்பனையாளர் அருணாச்சலம் என்பவர் சரோஜா தேவிக்கு விற்பனை செய்யததாக தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் மாவட்ட பதிவாளர் தகவல் வழங்கியிருக்கிறார் அந்த ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் அந்த ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. எனக்கு பத்திரம் எழுதிய முருகன் என்பவர் வாங்கி கொடுத்தார். வா.சா.ஆ.1ஐ நானும் முருகன் என்பவரும் சேர்ந்து பிரதிவாதி பெயரில் மோசடியாக எழுதிய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் அவர் தான் போட்டார். வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதி ஆறுமுகத்தின் கையொப்பம் என்று காட்டக்கூடிய வேறு ஆவணம் என்னிடம் இருக்கிறதா என்றால் இல்லை.

4. பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து இருக்கிறதா என்றால் பூர்வீக சொத்து இருக்கிறது. பிரதிவாதியை கிரையம் செய்து கொடுக்கும் படி நான் நேரடியாக சென்று கேட்டதாக என் வழக்குரையில் விவரம் இல்லை என்றால் ஆமாம் இல்லை. ஆனால் நேரில் சென்று கேட்டேன். வா.சா.ஆ.1 பொய்யான ஆவணம் என்பதால் நான் பிரதிவாதியை பார்த்து கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பொய்யான ஆவணம் என்றாலும் அதன் அடிப்படையில் பிரதிவாதி பணம் தர வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையில் பிரதிவாதி சொத்தை விற்க முயற்சி செய்தார் என்று விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் காரணங்கள் கூறி பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்ததால் பிரதிவாதிக்கு நான் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.